## கழகத் தலைவரின் கட்டளையை மனதில் ஏந்தி ஒற்றுமையோடு உழைத்திடுவோம்!

# 2026 - சட்டமன்றத் தேர்தல் : 200 தொகுதிகள் நம் இலக்கு!

## கடலூர் கிழக்கு மாவட்டக் கழக சார்பு அணிகள் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

கடலூர்,நவ.27-

**கடலூரில், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான சந்திப்பு–ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, 2026 - சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகள் இலக்கு என்னும் கழகத் தலைவரின் கட்டளையை மனதில் ஏந்திக் கொண்டு ஒவ்வொரு நாளும் ஒற்றுமையோடும் - திட்டமிடலோடும் அயராது உழைத்திடுவோம் என்று அவர் குறிப்பிட்டார்.**





கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

கடலூர் கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் உடனான இந்த சந்திப்பைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டச் செயலாளரும்அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்,இந்த மண்டலத்தில் இளைஞர் அணியின் பணிகளை ஒருங்கிணைக்கும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் மற்றும் கழக சார்பணிகளின் நிர்வாகிகளாகிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பலரும் பிறந்தநாள் வாழ்த்து கூறினீர்கள், அதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி, துறையூர் அதன்பிறகு நேற்று முழுவதும் நாகை மாவட்டத்தில் கழக நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகள் எனத் தொடர்ந்து மூன்று நாட்களாக சுற்றுப்பயணம். இன்று (25.11.2024) காலையிலிருந்து கடலூரில் பல்வேறு நிகழ்ச்சிகள். இன்னும் சொல்லப்போனால், இந்த நிகழ்ச்சி பகல் 1 மணிக்கு தொடங்க வேண்டியது. வழிநெடுக மக்களின் வரவேற்பு, கழகத்தினரின் வரவேற்பு, எழுச்சி பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வருகிறேன். அதனால், சற்று தாமதமாகியுள்ளது. இருந்தாலும், நீங்கள் எந்த அளவிற்கு எழுச்சியோடு வந்து இருக்கிறீர்கள் என்பது உங்கள் முகத்திலே தெரிகிறது.

### சார்பு அணிகளின் நிர்வாகிகள்

இந்த கடலூர் மாவட்டத்திற்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், எந்த மாவட்டத்திற்குப் பயணம் சென்றாலும், இதுபோன்ற சார்பு அணிகளின் நிர்வாகிகளை எல்லாம் வரவழைத்து, அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுடன் குழு, புகைப்படம் எடுத்துக்கொள்வது வழக்கம். கிட்டத்தட்ட நான்கு, ஐந்து மாவட்டங்களை முடித்துவிட்டு, இந்த கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு வந்து இருக்கிறேன்.

வருகைப் பதிவேடு எடுத்துவிட்டீர்களா, எல்லோரும் வந்திருக்கிறார்களா? வந்தவுடன் நான் கேட்கின்ற முதல் கேள்வி. 100 விழுக்காடு அனைத்து அமைப்பாளர்களும், அனைத்து நிர்வாகிகளும் வந்து இருக்கிறீர்கள் என்று நம் மாநிலத் துணைச் செயலாளர் சொன்னார். அதற்கு முழுப்பெருமை அண்ணன் எம்.ஆர்.கே அவர்களுக்குத்தான். கழகத்தை இவ்வளவு கட்டுப்பாட்டோடு வைத்து இருக்கிறார்.

நீங்கள், நம் கழகத்தின் மீது எவ்வளவு ஈடுபாட்டில் இருக்கிறீர்கள் என்பதற்கு இது ஒன்றே மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை, பசியைப் பொறுத்துக்கொண்டு, என்னைப் பார்ப்பதற்கும், நம் அண்ணன் அவர்களை பார்ப்பதற்கும் காத்துக்கொண்டு இருந்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத் தலைவர், நம் முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், இன்றைக்கு நம் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் சார்பு அணிகள் உங்களையெல்லாம் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### ஒரே ஒரு வேண்டுகோள்

இந்த கடலூர் மாவட்டத்திற்கு இதற்குமுன்பு கழக உறுப்பினராக வந்து இருக்கிறேன். இளைஞர் அணிச் செயலாளராக வந்து இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக வந்து இருக்கிறேன். விளையாட்டுத்துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். ஆனால், இது மறக்க முடியாத அனுபவம். முதல்முறையாக துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு உங்களையெல்லாம் சந்திக்க வந்து இருக்கிறேன். தலைவர் அவர்கள் அந்த பொறுப்பை எனக்குக் கொடுத்தவுடன் தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனைபேரும் படையெடுத்து என்னை வாழ்த்த சென்னைக்கு வர ஆரம்பித்தார்கள். அப்போது ஒரே ஒரு வேண்டுகோள் வைத்தேன்.

தயவுசெய்து யாரும் சென்னைக்கு வராதீர்கள். உங்களின் மாவட்டத்திற்கு வந்து, உங்களின் வாழ்த்துகளை வாங்க நானே வருகிறேன் என்று சொன்னேன். அந்த வகையில், உங்களின் வாழ்த்துகளையும் பெறுவதற்காகத்தான் இங்கு வந்து இருக்கிறேன்.

### சாதாரணமான மண் இல்லை

துணை முதலமைச்சராகி கடலூர் மாவட்டத்திற்கு முதல் பயணமே, மறக்க முடியாத பயணமாக அமைந்திருக்கிறது. அதேபோல், நம் கடலூர் மண் சாதாரணமான மண் இல்லை. திராவிட இயக்கத்திற்குப் பல தலைவர்களை உருவாக்கிய மண் கடலூர். இம்மாவட்டத்தில் இருக்கின்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்தை `திராவிட இயக்கத்தின் தொட்டில்' என்று சொல்வார்கள். தமிழ் உணர்வுக்கும், சுயமரியாதைக்கும் பெயர்போன மண்தான் இந்த கடலூர் மண். இந்த கடலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் கால்தடம் படாத தெருவே கிடையாது என்று சொல்கின்ற அளவுக்கு புகழ்பெற்ற மண். அதேபோல் நம் கழகத் தலைவர், முதலமைச்சர் கொடியேற்றாத கிராமமே கிடையாது என்ற பெருமை மிகுந்த மாவட்டம் இந்த கடலூர் மாவட்டம்.

கலைஞர் அவர்களால் `வேங்கை' என்று போற்றப்பட்ட எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் கழகத்தின் கோட்டையாகக் கட்டப்பட்டது இந்த கடலூர் மாவட்டம். இன்றைக்கு அந்த `வேங்கையின் மைந்தன்' அண்ணன் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் கழகத்தை மிகுந்த கட்டுக்கோப்போடு வழிநடத்தி சென்றுகொண்டு இருக்கிறார். நம் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், நாம் சந்தித்த 7 தேர்தல்களிலும் வெற்றிபெற்று இருக்கிறோம்.

### மிகப்பெரிய சான்றிதழ்

குறிப்பாக, நடந்து முடிந்த 2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 40-க்கு 40 தொகுதிகளிலும் நம் தமிழ்நாட்டு மக்கள் திராவிட மாடல் அரசிற்கு ஒரு மிகப்பெரிய சான்றிதழைக் கொடுத்தார்கள். 100 விழுக்காடு வெற்றியைக் கொடுத்தார்கள். கடலூர் மக்களவைத் தொகுதியில் நம் கூட்டணி வேட்பாளர் விஷ்ணு பிரசாத் அவர்களை சுமார் 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிப்பெற வைத்து இருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் உங்கள் அத்தனைப் பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றிக்காக உழைத்த கழக மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், தொண்டர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வருகின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் எவ்வளவு முக்கியமான ஒரு தேர்தல் என்று உங்களுக்குத் தெரியும். அதற்கான பணிகளை முதன்முதலாக ஆரம்பித்த இயக்கம் என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழகம் தான். நான்கு மாதங்களுக்கு முன்பு நம் தலைவர் அவர்கள் பொதுக்குழுவிலேயே சொல்லிவிட்டார். முப்பெரும் விழாவிலேயே நம் சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார். எப்படிப் பணிகளை நாம் முதலில் ஆரம்பித்து இருக்கிறோமோ, அதேபோல் தேர்தலிலும் நாம் வெற்றிபெற்று முதலிடத்தைப் பிடிக்க வேண்டும். அதற்காகத்தான் தலைவர் அவர்கள் முதலில் ஆரம்பித்து இருக்கிறார். அதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### ஒருங்கிணைப்புக் குழு

சட்டமன்றப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் ஒரு ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்தார்கள். அந்த ஒருங்கிணைப்புக் குழுவில் நானும் இருக்கிறேன். களத்தில் பணிகளை உங்களோடு இணைந்து ஒருங்கிணைக்க தொகுதிக்கு ஒருவர் என்று 234 தொகுதிப் பார்வையாளர்களையும் நியமித்துள்ளார். அதன் தொடர்ச்சியாக, தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், இன்றைக்கு இந்தக் கூட்டம் சிறப்பாக நடைபெறுகிறது.

அணிகள் என்றால் ஆங்கிலத்தில் `விங்ஸ்' என்று சொல்வார்கள். விங்ஸ் என்றால் `சிறகுகள்' என்று அர்த்தம். யூத் விங், ஸ்டூடன்ட் விங், ஐ.டி.விங், ஃபார்மர்ஸ் விங் என்று ஏகப்பட்ட அணிகள் இருக்கின்றன. இப்படி ஏகப்பட்ட சிறகுகளைக் கொண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தச் சிறகுகள் எல்லாம் சிறப்பாகச் செயல்படுவதால்தான் நம் கழகம் இன்றைக்கு உயர, உயர பறந்துக்கொண்டு இருக்கிறது என்பதற்கு அந்த விங்ஸ்தான் மிகமிக முக்கிய காரணம்.

### மாவட்டக் கழகச் செயலாளர்

சார்பு அணி நிர்வாகிகள், நாம் வெறும் சார்பு அணிதானே என்று சாதாரணமாக இருந்துவிடக் கூடாது. ஏனென்றால், இன்றைக்கு இளைஞர் அணியில் இருந்தவர்தான் கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சராக வந்து இருக்கிறார். மாணவர் அணியில் இருந்தவர்தான் கழகத்தின் பொதுச்செயலாளராக வந்து இருக்கிறார். ஏன், உங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இளைஞர் அணியில் சிறப்பாக செயல்பட்டதால் தான் அண்ணன் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் இன்றைக்கு அமைச்சராக, மாவட்டக்கழகச் செயலாளராக வந்து இருக்கிறார்.

அதுமட்டுமல்ல மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணி என்று பல்வேறு அணிகளில் இருந்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படி நிறைய பேர் பொறுப்புக்கு வந்து இருக்கிறார்கள்.

இங்கு இருக்கின்ற மாவட்ட நிர்வாகிகளில் பலர் சார்பு அணியில் சிறப்பாக செயல்பட்டு, மாவட்ட நிர்வாகத்திற்கு சென்றிருக்கிறார்கள். அதனால், சார்பு அணிகளுக்கான முக்கியத்துவம் எப்போதுமே கழகத்தில் இருந்துகொண்டுதான் இருக்கும். சார்பு அணிகள் கழகத்தில் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக் களம் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

### உங்களுக்கான அங்கீகாரம்

உங்களின் பணியை, கடமையை சரியாக செய்துகொண்டு வந்தீர்கள் என்றால், கண்டிப்பாக நம் தலைவர் அவர்கள் உங்களுக்கான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில் நிச்சயமாக உங்களுக்குக் கொடுப்பார் என்பதற்கு நான் உங்களுக்கு உத்தரவாதம் தருகிறேன்.

நீங்கள் ஒவ்வொருவரும் 200, 300 வாக்குகள் பெற்றுத்தரும் நிலைமைக்கு வந்து விட்டீர்கள் என்றால், உங்களை யாராக இருந்தாலும் நிராகரிக்க முடியாது. உங்களின் தேவை அவர்களுக்குத் தேவைப்படும். அதனால் 250, 300 வாக்குகள் உங்கள் கையில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். உங்களின் கட்டுப்பாட்டில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

தலைவர் அவர்கள் ஏற்கனவே அறிவுரை சொல்லி இருக்கிறார்.

ஒரு நாளில் 2 மணி நேரத்தைக் கழகப் பணிக்காக ஒதுக்குங்கள். வாரக் கடைசியில் ஒரு நாள் முழுக்க கழகப் பணிக்காக உங்களின் நேரத்தை ஒதுக்குங்கள். வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, நடுநிலையான வாக்காளர்களைக் கழக ஆதரவாளர்களாக மாற்றுவது, போன்ற பணிகளை நீங்கள் இன்றிலிருந்தே தொடங்கலாம். உங்களுக்கான வழிகாட்டுதல்களைத் தலைமைக் கழகமும், மாவட்ட கழகமும் தொடர்ச்சியாக வழங்கும்.

### கலந்துரையாடல் கூட்டம்

பி.எல்.ஏ-2, பி.எல்.சி நிர்வாகிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை மாவட்டக் கழகத்துடன் இணைந்து வழங்குங்கள். மாதம் ஒரு முறையாவது மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்களில் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்டச் செயலாளர்களிடமும், மாநில நிர்வாகிகளுடனும் கலந்து பேசிவிட்ட உங்களின் பணிகளை இன்றிலிருந்தே நீங்கள் தொடங்கலாம். வாக்காளர்களை சந்திக்க கருத்தரங்கம், தெருமுனைக் கூட்டம், திண்ணை பிரச்சாரம், நலத்திட்ட உதவிகள் முகாம் வழங்குகின்ற நிகழ்ச்சி என்று எளிமையான நிகழ்ச்சிகளைத் திட்டமிடுங்கள். கழக அரசின் சாதனைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேருங்கள்.

இந்த மூன்றரை ஆண்டு ஆட்சி சாதனைத் திட்டங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருத்தராவது, நிச்சயமாக ஒரு பயனாளியாக இருப்பார்கள். ஒரு குடும்பத்திடம் சென்று திட்டங்களைப் பற்றி பேசினாலே அவர்கள் தெரிந்து கொள்வார்கள். உதாரணத்திற்கு ஒரு ஐந்து திட்டங்களைச் சொல்கிறேன். குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், சென்ற தேர்தலைவிட இந்தத் தேர்தலில் மகளிர் தி.மு.க-விற்கும், நம் திராவிட முன்னேற்றத் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்துள்ளார்கள் என்று புள்ளிவிவரம் சொல்கிறது.

### நல்ல நல்ல திட்டங்கள்

மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். ஒவ்வொரு மாதமும் அந்த திட்டத்தின் வாயிலாக 900-லிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். காலை உணவுத் திட்டத்தின் வாயிலாக 20 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் பயன் பெற்று வருகிறார்கள். புதுமைப்பெண் என்ற திட்டத்தின் வாயிலாக உயர்கல்வி படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கும் அதேமாதிரி தமிழ்ப்புதல்வன் என்ற திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் வாயிலாக கிட்டத்தட் ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் கொண்டு சேருங்கள்.

இதையெல்லாம் தெருமுனைப் பிரச்சாரங்களாக, திண்ணைப் பிரச்சாரங்களாக மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள். தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது நான்கு முறை சந்தித்திருக்க வேண்டும். ஒவ்வொருவரையும் சந்தித்து இதைப்பற்றி பேசுங்கள். பொது மக்கள் ஏதாவது கோரிக்கை வைத்தார்கள் என்றால், உங்களால் முடிந்தால் அதை செய்து கொடுங்கள். உங்களால் முடியாதவற்றை சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்ற நிர்வாகிகள், மாவட்ட அமைச்சர் மூலமாக அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான முயற்சிகளை நீங்கள் செய்யுங்கள்.

களத்தில் எப்படி உழைக்கிறோமோ, அதைவிட இப்போது சமூக வலைத்தளத்தில் உழைப்பதும் மிகமிக முக்கியம். அதிலும் நீங்கள் துடிப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா ஊடகங்களும் உண்மையைச் சொல்லுமா என்று தெரியவில்லை. ஆனால், நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு உண்மையான ஊடகமாக மாறி, செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### உழைக்க வேண்டும்

நம்மை நம்பித்தான் தலைவர் அவர்கள் முப்பெரும் விழாவில், கழக அணி 234 தொகுதிகளில் 200 தொகுதிகள் கண்டிப்பாக வெற்றிபெற போகிறோம் என்ற உறுதிமொழியை தலைவர் அவர்கள் கொடுத்தார். அந்த இலக்கு மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். நாம் 200 தொகுதிகள் வெல்ல வேண்டும் என்றால், அதற்கு நீங்கள் 100 சதவிகிதம் உழைக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு 23 அணிகள் இருக்கலாம், மாவட்டம், ஒன்றியம், பேரூர் என்று அமைப்புகள் இருக்கலாம். ஆனால் நாம் எல்லோரும் ஒரே அணி. அது கலைஞர் வழியில் வந்த நம் தலைவர் அணி என்பதை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு 2026-ல் 7-வது முறையாக கழகம் ஆட்சி அமைத்து, நம் கழகத் தலைவர் அவர்களை இரண்டாவது முறையாக தொடர்ச்சியாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைக்க வேண்டும் என்றால், அதற்கு சார்பு அணிகளின் உழைப்பு மிக மிக முக்கியம் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

---

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!


## நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் மருத்துவ முகாம் - நல உதவிகள் வழங்கல்!

### மாவட்டக் கூட்ட தீர்மானங்களை விளக்கி எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!

*நாமக்கல், நவ. 27 -*

*நாமக்கல் மேற்கு மாவட்டச் கழகச் செயற்குழுக் கூட்டம் 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்ட கழக அலுவலகம், தளபதியார் அரங்கில் மாவட்ட கழக அவை தலைவர் இரா. நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை கழகத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.*

*கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :*



*தீர்மானம் 01 வருகின்ற நவம்பர் 27ஆம் தேதி கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடும் விதமாக நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் சமத்துவம் மற்றும் சமூக நீதி காக்கும் நமது கழக இரு வண்ணக் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கவும், மருத்துவமுகாம், இரத்ததானமுகாம் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் நடத்த வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.*

*தீர்மானம் 02 கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி வாக்குச்சாவடி வாரியாக பாக முகவர்கள் (BLA2), பூத்கமிட்டி(BLC) உறுப்பினர்களை விரைவாக நியமனம் செய்திட வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.*

*தீர்மானம் 3 நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும், தொகுதி வாரியாக கழக இளைஞர் அணி சார்பில் சமூக வலைதள பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்தி திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள் மற்றும் நலத்திட்டங்களை சமூக வலைதளங்கள் மூலம் அனைத்து தரப்பினரிடமும் கொண்டு செல்ல வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது*

*தீர்மானம் 4 நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பெயரில் இந்தியன் வங்கியில், திருச்செங்கோடு கிளையில் கணக்கு துவக்குவதெனவும், இந்த கணக்கை மாவட்ட கழக செயலாளர் இயக்குவதெனவும் தீர்மானிக்கப்படுகிறது.*

*கூட்டத்தில் மாநில ஆதி திரவிடர் நலக்குழு துணை செயலாளர் பரமானந்தம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் அன்பழகன், மயில்சாமி, சாந்தி, பொருளாளர் ராஜாராம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ரங்கசாமி, செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், திருநாவுக்கரசு (எ) பழனியப்பன், சாமிநாதன், சிவக்குமார், இந்திராணிமயில்சாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் தங்கவேல், செல்வராசு, பழனிவேல், தனராசு, சண்முகம், தங்கவேல், சண்முகம், நாச்சிமுத்து, செல்வம், இளங்கோவன், நகர கழக செயலாளர்கள் விஜயகண்ணன், ஞானசேகரன் பேரூர் கழக செயலாளர்கள் ரமேஷ்பாபு, முருகன், முருகவேல், ராமமூர்த்தி, பி.கார்த்திராஜ், மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் பாலாஜி, சுந்தர், நவலடி ராஜா, ஜெகதீஷ்குமார், முரளி, கார்த்திகேயன், ரமேஷ், கௌதம், கந்தசாமி, சாதிக்பாட்ஷா, கிரிசங்கர், பாலசுப்ரமணியன், ஷேக்தாவுத், கருணாகரன், ரங்கசாமி (எ) குமார், ராஜவேல், சுரேஷ்குமார், ராஜவேலு, காமராஜ், வேல்முருகன், மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

---

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் முழுவதும் நலத் திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ். எம் எல் ஏ., அறிக்கை!

*கிருஷ்ணகிரி, நவ.27-*

*கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ். அறிக்கை விடுத்துள்ளார்.*



*கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் இன்று (27.11.2024) கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் முழுவதும் மாநகர, ஒன்றிய, பேரூர், கிளை, வார்டு, பகுதிகள் முழுவதும் கழக கொடியேற்றி, இனிப்புகள், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு, பேனா, புத்தகங்கள் வழங்கியும் மற்றும் முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கியும் மிக சிறப்பாக கொண்டாட வேண்டும் எனவும்,*

*மேலும் ரத்ததான முகாம்கள் ஆங்காங்கே நடத்திட வேண்டும்*

*அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநகர கழக, ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக, கிளை கழக, வார்டு கழக, செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி தலைவர்கள் துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் முழுவதும் நமது குடும்ப விழாவாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்ட கழக செயலாளர், ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ.. தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*